# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 133/மா/2017
ஆணை நாள்: 10.01.2020

திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன்,
திருச்சராப்பள்ளி. – **முறையீட்டு மனுதாரர்**

ஆணையர் மற்றும் அலுவலர்கள்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. – **எதிர்மனுதாரர்கள்**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, புத்தூர் ஆபிசர்ஸ் காலனி, எண்.3 என்ற முகவரியில் வசிக்கும் திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன் என்பவரது 8.6.2017 நாளிட்ட முறையீட்டு மனு 12.6.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.133/2017 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அறிக்கைகள் பெறப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, புத்தூர் ஆபிசர்ஸ் காலனி, எண்.3 என்ற முகவரியில் வசிக்கும் திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன் என்பவர் தனது 8.6.2017 நாளிட்ட முறையீட்டு மனுவில், கீழ்கண்ட குற்றச்சாட்டுகளை திருச்சி மாநகராட்சி நிர்வாகத்தின் மீது தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

(1) கடந்த 10 ஆண்டுகளில் 5000-க்கும் அதிகமான கட்டடங்களில் விதி மீறல்கள் கண்டறிப்பட்டுள்ளன;

(2) கட்டடங்களின் அளவைக்குறைத்தும், பயன்பாட்டின் தன்மையை மாற்றியும் சொத்துவரி விதிப்பால் ரூ.500 கோடி நிதி இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது;

(3) விதி மீறிக்கட்டப்பட்டுள்ள் கட்டடங்கள் சம்பந்தமான கோப்புகள் அலுவலகத்தில் இல்லையென பொய்யான தகவல் அளிப்பதற்கு ரூ.25 லட்சம் வரை கையூட்டு பெற்றது;

(4) இளநிலை பொறியாளர்கள், திரு. ஜெயக்குமார் மற்றும் திரு. சிவபாதம், வரிதண்டலர் திரு. சேதுராமன் மற்றும் உதவி வருவாய் ஆய்வாளர் சிராஜீதின் ஆகியோர் முறைகேடான செயலில் ஈடுபடுவது.

முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவத்தின் 24.06.2017 நாளிட்ட அறிவிப்பாணையின்படி திருச்சி மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது.

திருச்சி மாநகராட்சி ஆணையரின் 12.10.2017 நாளிட்ட அறிக்கையில் திருச்சி மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படாவண்ணம் கூடுதலாக கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள் மற்றும் விடுபட்டுள்ள கட்டுமானங்கள் வரிவிதிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, முன் தேதியிட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது என்றும், தவிர அரசு முதன்மை செயலாளர் அவர்களால் 12.07.2017 ஆம் தேதியன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தின் கூட்ட நடவடிக்கைகளின் குறிப்பில் வரிவிதிப்பு செய்யப்படாத மற்றும் குறைத்து வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ள கட்டுமானங்களை கண்டறிந்து இவ்வாறான கட்டுமானங்களை முன்தேதியிட்டு வரிவிதிப்பு செய்திட வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி கேட்பு எழுப்பி வசூல் செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், திரு. வி. ஜெயக்குமார், உதவி செயற் பொறியாளர் (திட்டம்) என்பவர் மீதான கையூட்டு புகார் தொடர்பாக அப்பணியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தொடர் நடவடிக்கையில் இருந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். விதி மீறல் கட்டிடங்கள் மீது முறையான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், முறையீட்டு மனுதாரர் திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நீதிப்பேராணை மனு எண். 2184/2015 ன் வாயிலாக மாவட்ட ஆட்சியர், மதுரை மாநகராட்சி ஆணையர் உள்ளடக்கிய 30 பிரதிவாதிகளை இணைத்து வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 14.6.2017 நாளிட்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர் 24.7.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் திருச்சி மாநகராட்சியில் 5634 கட்டிடங்கள் விதி மீறல் கட்டிடங்கள் என தக்வல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் பெறப்பட்டது என்றும், விதி மீறல் கட்டடங்களின் உரிமையாளர்களுக்கு சாதமாக திருச்சி மாநகராட்சி செயல்படுகிறது என்றும், ஏற்கனவே சொத்துவரி விதிப்பில் முறைகேடுகள் நடந்துள்ளதாக இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்யப்பட்டு, அம்முறையீட்டு மனுமீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு, முறையீட்டு மனுவில் கூறப்பட்ட குற்றச்சாட்டு உண்மை என நிரூபிக்கப்பட்டு, முறைமன்ற நடுவத்தால் சுமார் ரூபாய் ஐந்து இலட்சம் வரிவிதிப்பில் முறைகேடு நடந்ததுள்ளது என உறுதி செய்து ஆணையிடப்பட்டது என்றும், மேற்படி ரூபாய் ஐந்து இலட்சம் வசூல் செய்தார்களா என்பது சந்தேகமாக உள்ளது என்றும், உரிய அசல் ரசீதுகளை ஆய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்ளவதாகவும், 2017 ஆம் ஆண்டு சென்னையில் பெரும்மழையின் காரணமாக வெள்ளப் பெருக்கால் ஏற்பட்ட பாதிப்புகள் சம்பந்தமாக திருச்சி வணிக நிறுவனங்களிடம் நிவாரணம் வழங்குவதற்காக முப்பது இலட்சம் ரூபாய் வசூல் செய்யப்பட்டு ஏழு இலட்சத்திற்கு நிவாரண பொருள்கள் வழங்கிவிட்டு மீதிப்பணத்தை எதிர்மனுதாரர்கள் பங்கு போட்டுக் கொண்டார்கள் என்றும், ஏற்கனவே ஊழல் புகார் காரணமாக திரு. சேதுராமன் பணியிட மாற்றம் செய்யப்பட்டு மீண்டும் பழைய பணியிடத்திற்கே பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்றும், மேலும் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள 11 நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மேற்படி நபர்களின் பட்டியல் திருச்சி மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அறிக்கை கோரப்பட்டது. திருச்சி மாநகராட்சி ஆணையர் 21.05.2019 நாளிட்ட அறிக்கையில் திருச்சி மாநகராட்சி சட்ட பிரிவின் அடிப்படையிலும், நகர் ஊரமைப்பு சட்டப்பிரிவின் அடிப்படையிலும் விதிமீறல் கட்டடங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தொடர் நடவடிக்கையில் உள்ளது என்றும், திரு.வி.ஜெயக்குமார் உதவிசெயற்பொறியாளர் (திட்டம்) என்பவர் மீது திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பணியாளர்கள் ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல் முறையீடு விதிகள், விதி 8 (1) ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் திரு. அல்லூர் ஸ்ரீநீவாசன், திருச்சி என்பவரால் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு கூடுதலாகவும் மாறுதலாகவும் கட்டப்பட்டுள்ள கட்டங்கள் மீது சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில்,

நீதிப்பேராணை எண். 2184/2015 ன்படி வழக்கு தொடரப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971ன் கீழ் பிரிவுகள் 49, 56 (2A) மற்றும் 57ன்படி மூடி முத்திரையிட 03.12.2018ல் அறிவிப்பு வழங்கப்பட்டது என்றும், இத்னைத் தொடர்ந்து திருத்திய வரைபடத்திற்கு அனுமதி கோரிய மனுதாரர்களின் மேல்முறையீட்டு விண்ணப்பம் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் அனும்தி மறுக்கப்பட்டு 14.12.2018ல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், இதனைத் தொடர்ந்து வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறைக்கு பிரிவு 80ஏ ன் கீழ் மனுதாரர்களால் மேல் முறையீடு செய்யப்பட்டது என்றும், அதன் பேரில் தற்போதைய நிலையே தொடர (Status Quo) கடிதம் எண். 25918/UD4(1)/2018-1 நாள்:04.01.2019-ன்படி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் ஆணையர் தனது அறிக்கையில், தலைமை செயலகத்தில் கூடுதல் செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, சென்னை அவர்கள் தலைமையில் பல்வேறு நாட்களில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டங்களில் மேற்படி பொருள் தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் கோப்புகள் ஆய்வு செய்து வருகிறார்கள் என்றும் திரு. எஸ். சேதுராமன் வரிவசூலர் (பொ) உள்ளிட்ட வருவாய் பிரிவு பணியாளர்களை நிர்வாக ரீதியாக பணியிட மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து அப்பணியாளர் பணியிலிருந்து ஒய்வு பெற்றுவிட்டார் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சிரப்பள்ளி மாநகராட்சி ஆணையர் தனது 8.8.2019 நாளிட்ட அறிக்கையில் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறைக்கு கட்டிட உரிமையாளரால் மேல்முறையீடு செய்யப்பட்டு அதன் மீது தற்போதைய நிலை தொடர (Status Quo) வழங்கிய உத்திரவு எண். 25918/UD4(1)/2018-1 நாள்: 4.1.2019-ன் நகல் அனுப்பியுள்ளார். மேலும் 19.9.2018 நாளிட்ட அறிக்கையில் திரு. V. ஜெயக்குமார் உதவி செயற்பொறியாளர் (திட்டம்) என்பவர் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மீது இறுதியாணை வழங்க கோப்பு நடவடிக்கைகள் உள்ளது என்றும், இந்நிகழ்வில் தொடர்புடைய 12 பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் விதிமீறல் கட்டிடங்கள் தொடர்பாக அரசிடம் மேல் முறையீடு செய்யப்பட்டு தற்போதைய நிலையே தொடர ஆணையிடப்பட்டுள்ளது. நீதிமன்ற வழக்கும் நிலுவையில் உள்ளதாகவும் அறிய முடிகிறது.

இந்நிலையில், மாநகராட்சி ஆணையரின் அறிக்கையை ஏற்று மேற்படி கட்டிடங்கள் குறித்து வழங்கப்படும் அரசாணை மற்றும் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கில் வழங்கப்படும் தீர்ப்பாணையின்படி நடவடிக்கை மேற்கொள்ளவும், சம்மந்தப்பட்ட அலுலவர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவிப்பதிவாளர்

பெறுநர்

1. திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன்,
எண்.3, ஆபிசர்ஸ் காலனி,
புத்தூர், திருச்சராப்பள்ளி – 620 017.

2. ஆணையர்,
திருச்சராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சராப்பள்ளி.

3. நகராட்சி நிர்வாக ஆணையர்,
ஆர்.ஏ.புரம், சென்னை – 600 028.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரி